www.tamilarangam.net

# தமிழக ஈழ நட்புறவுக் கழகம்

## கோவை நகரக் கிளை

தமிழகத்தீர்!

உரிமை படைத்த தேசிய இனங்களாக உலக அரசியல் அரங்கில் அனைவரும் வாழ முற்படும் இந்தக் காலத்தில், நம் தமிழ் இனம் மொழி நிலையில் ஒத்துரிமை இழந்து அடிப்படை உரிமைகளையும் பறிகொடுக்க இருக்கிறது. இத்தகைய நிலைமையில் ஈழத் தமிழர்கள், அடக்கு முறைக்கு ஆளாகி, அவ்வப்பொழுது பெரும் இன்னல்கட்கும் அழிவுகட்கும் ஆட்படுத்தப் படுகிறார்கள். இப்போக்கைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்பது ஒரு மாந்த (மனித) உரிமைச் சிக்கலாகிறது (*Problem of Human rights*) உலகம் முழுதும் உள்ளோர் கவனிக்க வேண்டிய இச்சிக்கலில் மற்றவர் நாட்டம் செலுத்துமுன், உணர்வு நிலையில் தாய்த் தமிழகத்துத் தமிழர்களாகிய நாம் கருத்தூன்றிக் கவனம் செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம். உண்மைகளை அறியவும், மற்றவர்களுக்கு உணர்த்தவும் நட்புறவுக் கழகம் அமைத்து உள்ளோம். உறுப்பினராகி ஒன்றுபட்டுச் செயலாற்றி உதவ வேண்டுமென உங்களை அழைக்கிறோம்.

தி. பி. 2009,
மீனம் (பங்குனி) 17 –
30 – 3 – 1978
வியாழன்

**தமிழக ஈழ நட்புறவுக் கழகத்தார்**
**6, வேங்கடாசலம் தெரு, கோவை - 2**

---

கலைமகள் – கோவை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்